தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம் அனைத்து நாட்டு காவல் துறை திட்டங்களுக்கு (Interpol Projects) ஏதேனும் உதவி புரிந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) குற்றஞ்சார்ந்த வழக்குகளில் கண்ணாடித்தூள்கள் பரிசோதனையில் தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம் அனைத்து நாடுகள் காவல் நிறுவனத்தின் (Interpol) உடனுழைப்புடன், ஆராய்ச்சியினை மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. ஆராய்ச்சித் திட்ட விவரங்கள் தயாரிக்கப்படவில்லை. இது வரையில் எந்த விதமான உதவியும் அளிக்கப்படவில்லை.

Deep X-Ray Therapy Unit.

*173. Q. THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Deep X-ray Therapy Unit is to be purchased for installation at Rajah Mirasdar Government Hospital Thanjavur ; and

(*b*) if so, the reason for purchasing the same instead of a Cobalt Therapy Unit ?

நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நிறுவப் படுவதற்காக நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு வாங்கப்படவிருக்கிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கோபால்ட் சிகிச்சை இயந்திரப் பிரிவுக்குப் பதிலாக மேற்சொன்ன இயந்திரப் பிரிவை வாங்குவதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

1973 டிசம்பர் 1]

(இ) இத்துறையில் இந்த கருத்துப் பரிசீலனையிலிருந்தபோது ஆழ் கதிர் வீச்சுச் சிகிச்சைக் கருவி வாங்குவதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுவிட்டது.

Thiru G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know whether the same has been installed and when it is going to be opened for the use of the public at Rajah Mirasdar Hospital Thanjavur ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 22—3—1973 இந்த ஆலோசனை—டீப் எக்ஸ்ரேக்குப் பதிலாக கோபாட்ல் யூனிட் வாங்குவது நல்லது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த ஆலோசனை மருத்துவக் கல்வித்துறை இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு முன்னுலேயே டீப் எக்ஸ்ரே பிரிவு வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் அதை மாற்றுவதற்கு இயலாத நிலை ஏற்பட்டது என்று சொல்லிவிட்டார்கள். அது அண்மையில் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வரக்கூடும், என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்ருல் அந்த நிலைமையில் மேலும் அதை ஏற்படுத்தி முடித்துவிட்டதாக இன்னும் செய்தி கிடைக்கவில்லை.

Thiru G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know whether there is any proposal to purchase a rotating Cobalt unit for the Thanjavur Medical College Hospital, Thanjavur ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோபால்ட் யூனிட் வாங்குவதில் இன்னும் கூட சில சிக்கல் இருக்கிறது. கன்வென்ஷனல் கோபால்ட் யூனிட் வாங்குவதாக இருந்தால், ஏறத்தாழ 6 லட்சத்திலிருந்து 8 லட்சம் ரூபாய் வரை தேவைப்படுகிறது. ஏற்கெனவே எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு வாங்குவதற்கு 6, 7 ஆண்டுகளாக முயற்சித்து அண்மையில்தான் மத்திய அரசின் வெளிநாட்டுச் செலாவணிக்கு ஒப்புதல் கிடைத்தது. ஆனுல், ஜேனஸ் யூனிட் என்ற ஒன்று அண்மையில் பம்பாயில் கிடைக்கக் கூடும் என்றும், அது பாபா ஆட்டாமிக் ரிசர்ச் சென்டரோடு தொடர்புடையவர்களால் உருவாக்கப்படுகிறது என்றும், இனி எதிர்காலத்தில் டீப் எக்ஸ்ரே தெரபி யூனிட்டுகள் வாங்கத் தேவையில்லை என்றும், இனி வாங்கக்கூடியது எல்லாம் கோபால்ட் யூனிட்டாக இருந்தால், அது ஜேனஸ் கோபால்ட் 60 என்ற அந்த யூனிட்டாக, இருக்கலாம் என்றும் இந்தத் துறையில் முடிவெடுக்கப்பட்டு, ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்த டீப் எக்ஸ்ரே சிகிச்சையை விட கோபால்ட் சிகிச்சை சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். சிறந்தது என்று தெரிந்தும்கூட, ஏன் டீப் எக்ஸ்ரே இயந்திரங்கள் வாங்கியிருக்க வேண்டும்; இப்போதாவது அந்த ஆர்டரை ரத்துச் செய்துவிட்டு, கோபால்ட் சிகிச்சைக்கான இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு முன் வருமா ? இல்லையென்ருல், அதை வேறு ஏதாவதற்குப் பயன்படுத்த முடியுமானுல், அப்படிச் செய்துவிட்டு, தஞ்சையிலும் கோபால்ட் யூனிட் மூலம் சிகிச்சை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் இடையில் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டேன். இந்த ஆலோசனை வழங்கப்பட்ட நேரத்தில், அதுபற்றி இரண்டு விதமான கருத்து அந்தத் துறையினரிடமிருந்து வந்தது. டீப் எக்ஸ்ரே யூனிட் தான் சிறந்த முறையில் சிகிச்சை வழங்குவதற்கு ஏற்றதாக இருக்கும் என்ற கருத்தும், கோபால்ட் தரபி யூனிட் அந்த அளவு எளிதாகப் பயன்படுத்த முடியாது என்ற எண்ணமும் இருந்தது. மற்றும் அது இந்தியாவில் கிடைக்காது என்ற நிலையும் அது வரையில் இருந்தது. வெளி நாட்டுச் செலாவணிக்கு மத்திய அரசு 6, 7 ஆண்டு காலம் கழித்துத்தான் சம்மதம் வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டது. ஏற்கெனவே மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனைக்குக் கேட்கப்பட்ட ஒன்றுக்கு 63-ல் வேண்டுகோள் தொடங்கி, 1965–66-ல் ஏற்றுக்கொள்ளப் பட்டு, 1968ல் வற்புறுத்தப்பட்டு, 1973-ல் தான் அனுமதி கிடைத்திருக்கிறது. இந்தச் சிக்கல் காரணமாக கோபால்ட் தெரபியூனிட்டுக்கு அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால், அண்மையில் பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டர் தருகிற கோபால்ட் ரிசோர்ஸஸைப் பயன்படுத்தி பம்பாயிலுள்ள இன்டர்நேஷனல் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி, இந்த ஜேனஸ் கோபால்ட் தெரபியூனிட்டை உருவாக்கிய காரணத்தால், இதைப் பயன்படுத்தலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் துறையைச் சேர்ந்த, மருத்துவக் கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் படிப்பு உள்ள கல்லூரிகள் உள்ள மருத்துவ மனைகளில் கோபால்ட் தெரபி யூனிட் ஏற்படுத்தப்படவில்லை. அதைத் தொடர்ந்து மற்ற இடங்களில் ஏற்படுத்த முயற்சிக்கப்படும்.

Nuisance of Pigs in Residential Areas in Madras City.

*174. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware of the nuisance of pigs in residential areas in Madras City ; and

(b) if so, the steps taken to eradicate this health hazard ?

சென்னை மாநகர் குடியிருப்புப் பகுதிகளில் பன்றிகளின் தொல்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், குடியிருப்புப் பகுதிகளில் காணும் பன்றிகள் தொல்லையை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், சுகாதாரக் கேடான இதனை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.